**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர்.**

DVC **.No.1/2016**

**2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா.3 –வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.பாலசுப்பிரமணியன் M.C. அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| ம.சா. | : 3 | | |
| பெயர் | : சக்கரவர்த்தி | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| சாதி | : | வயது | : |

**<u>11.12.2018</u>**

**<u>மனு அனுமதிக்கப்பட்டு ம.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் –</u>**

எனது சொந்த ஊர் குந்தபுரம் ஆகும். மனுதாரர் வேம்புவிற்கு நான் அக்கா கணவர் ஆவேன். மனுதாரர் கரைவெட்டி பரதூரில் இருந்தார். தற்போது அவருடைய அம்மாச்சி வீட்டில் குந்தபுரத்தில் வசித்து வருகிறார். மனுதாரர் தற்போது எங்கள் வீட்டில்தான் வசிக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் வேம்பு கரைவெட்டி பரதூரில் இருந்தபோது அவர்மேல் மண்ணெண்ணை ஊற்றிவிட்டார்கள். நான் வெங்கனூர் கிராமத்திற்கு செல்வதற்காக போனேன். ம.சா.2 கப்பையா என்னுடன் அந்த நேரத்தில் இருந்தாரா என்றால் எனக்கு முன்பே அவர் அங்கிருந்தார். எவ்வளவு நேரத்திற்கு முன்பு அவர் அங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. மனுதாரரும், அவருடைய கணவரும் வீட்டிற்கு சென்றபோது மனுதாரர் மேல் மண்ணெண்ணையை ஊற்றிவிட்டு கொழுத்த பார்த்தார்கள் நான் ஓடி வந்துவிட்டேன் என்று மனுதாரர் என்னிடம் சொன்னார். மனுதாரரை அவரது சித்தப்பா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் என் வீட்டிற்கு சென்று இருசக்கர வாகனத்தை விட்டுவிட்டு, என் மனைவியை அழைத்து கொண்டு மருத்துவமனைக்கு சென்றேன். இது சம்மந்தமாக நான் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் ம.சா.2 கருப்பையா மீது என்ன குறை சொல்கிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நானும், ம.சா.2 கருப்பையாவும் சேர்ந்து எதிர்மனுதாரரை பயம் வரவழைக்க வேண்டும் என்பதற்காக மனுதாரர் மீது மண்ணெண்ணை ஊற்றிவிட்டு

எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் ஊற்றியதாக பொய் சொல்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால் அவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள் என்பதற்காகதான் நாங்கள் புகார் கொடுக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு அக்கா கணவர் என்பதாலும், நெருங்கிய உறவினர் என்பதாலும் மனுதாரருக்கு ஆதரவாக எதிர்மனுதாரருக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.